**சீ. டபிள்யூ.ஈ கொன்ஸ்ரக்சன் மற்றும் இன்ஜினியரிங் (தனியார்) கம்பனி —2015/2016**

---

வரையறுக்கப்பட்ட சீ.டபிள்யூ.ஈ கொன்ஸ்ரக்சன் மற்றும் இன்ஜினியரிங் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் மூலம் இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நான் உதவியைப் பெற்றிருந்தேன். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

2016 மார்ச் 31 இல் கொடுக்கப்பட வேண்டிய மீதி ரூபா. 29,210,087 பெறுமதி தொடர்பாக கணக்காய்வுச் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

கம்பனியின் ஸ்தாபிப்பு தொடர்பான அமைச்சரவையின் அங்கீகாரம் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட சீ.டபிள்யூ.ஈ கொன்ஸ்ரக்சன் மற்றும் இன்ஜினியரிங் (தனியார்) கம்பனியின் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவினால் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்:

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்விற்கான நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேலே குறிப்பிடப்பட்டவாறாகும்.

(ஆ) எனது அபிப்பிராயமாவது:

* எனது கணக்காய்விற்குத் தேவைப்பட்ட எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன், எனது பரிசோதனைகளிலிருந்து இது வரை தென்படுகின்றவாறு கம்பனியினால் பொருத்தமான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தன.

* கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் திட்டம் பொதுத் திறைசேரியின் ஒத்துழைப்புடன் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 677,265 வரிக்கு பின் தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 10,185,185 வரிக்கு பின் தேறிய இலாபமொன்றாகக் காணப்பட்டமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 9,507,920 ஆன பற்றாக்குறையொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. வருமானம் ரூபா 10,893,746 இனால் குறைந்தமை நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட பற்றாக்குறைக்கு பிரதான காரணமாக காணப்பட்டது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிலிருந்து கம்பனியினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியினால் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

2009 யூன் 09 இன் டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 கணக்காய்வுக் குழு**

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.